(ஒன்பதாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர்)

இல. 1(14).] **பாராளுமன்றம்**

## 1 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2022 நவம்பர் 19 சனிக்கிழமை வெளியிடப்பட்டது

## 2022 நவம்பர் 26, சனிக்கிழமை

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

குத்தகைக்கு கொடுக்கப்பட்ட வளவுகளின் உடைமையை மீளப்பெறுதல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14(2) ஆம் பிரிவின் கீழ் செஸ் அறவீடு தொடர்பில் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2022 ஒக்டோபர் 05 ஆம் திகதிய 2300/15 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.11.17 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2022 ஒக்டோபர் 21 ஆம் திகதிய 2302/31 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.11.17 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— பெறுமதி சேர் வரிச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2005 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க திருத்தப்பட்டவாறான சட்டத்தின் 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரிச் சட்டத்தின் 2அ பிரிவின் கீழ், பெறுமதி சேர் வரி தொடர்பாக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் விதிக்கப்பட்டு, 2022 ஒக்டோபர் 06 ஆம் திகதிய 2300/25 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.11.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 1),— 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் 3(3) ஆம் பிரிவின் கீழ், துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீடு தொடர்பாக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் விதிக்கப்பட்டு, 2022 ஆகஸ்ட் 22 ஆம் திகதிய 2294/26 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.11.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 2),— 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் 3(3) ஆம் பிரிவின் கீழ், துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீடு தொடர்பாக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் விதிக்கப்பட்டு, 2022 ஒக்டோபர் 05 ஆம் திகதிய 2300/13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.11.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்,— குற்றவியல் கருமங்களில் பரஸ்பர உதவியளித்தல் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2002 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க குற்றவியல் கருமங்களில் பரஸ்பர உதவியளித்தல் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2022 ஒக்டோபர் 12 ஆம் திகதிய 2301/33 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.11.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளைத் திருத்துதல்,— பாராளுமன்ற நிலையியற் கட்டளைகள் திருத்துதல் தொடர்பாக 2022 நவம்பர் 18 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட நிலையியற் கட்டளைகள் பற்றிய குழுவின் அறிக்கையின் பின்வரும் விதப்புரைகள் ஏற்றுக்கொள்ளப்படுமாக:-

**தற்போதுள்ள பாராளுமன்ற நிலையியற் கட்டளை 121 ஐ உடனடுத்து பின்வரும் இரண்டு புதிய நிலையியற் கட்டளைகளாகிய 122 மற்றும் 123 ஆம் பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளை உட்புகுத்துக:-**

**புதிய நிலையியற் கட்டளை 122,—**

**வங்கித்தொழில் மற்றும் நிதிச் சேவைகள் பற்றிய குழு**

(1) தெரிவுக் குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் அமைச்சரவை அமைச்சர்கள் அல்லாத பதினாறு உறுப்பினர்களைக் கொண்ட வங்கித்தொழில் மற்றும் நிதிச் சேவைகள் பற்றிய குழுவெனப் பெயர்குறிக்கப்பட்ட குழுவொன்று இருத்தல் வேண்டும்.

(2) வங்கித்தொழில் மற்றும் நிதிச் சேவைகள் பற்றிய குழுவானது பின்வரும் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்,—

(அ) இலங்கையின் வங்கித்தொழில், காப்புறுதி மற்றும் ஏனைய நிதியியல்துறை சேவைகளின் தொழில்வாண்மை ரீதியான நியமங்கள் மற்றும் கலாசாரம் பற்றி பரிசீலித்து அறிக்கையிடுதல்;

(ஆ) சட்டவாக்க மற்றும் ஏனைய ஒழுங்குமுறைப்படுத்தும் செயற்பாடுகளுக்காக நியமங்களை மேம்படுத்துவதற்கும் விதப்புரைகளை ஏற்பாடு செய்வதற்கும் இந்நிறுவனங்களின் நுகர்வோர்களுக்கு வலுவூட்டுவதற்கும் அதிகரித்த ஒழுக்கநெறியை ஏற்பாடு செய்வதற்கும் மேம்பட்ட தொழிற்பாடு மற்றும் பன்முகத்தன்மையான வங்கித்தொழில், காப்புறுதி மற்றும் ஏனைய நிதித்துறைகளை உருவாக்குவதற்குமான மறுசீரமைப்புகள் பற்றிய விதப்புரைகளை மேற்கொள்ளல்;

(இ) சர்வதேச பொருளாதார கொள்கை, வெளிநாட்டு நிதிச் சேவைகள் ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் தொடர்புடைய விடயங்கள் மற்றும் இலங்கையின்நாணய விவகாரங்கள், கடன் மற்றும் நிதிச் சேவைகள் மற்றும் பொருளாதார வளர்ச்சி மீதான அவற்றின் விளைவுகள் பற்றி ஒரு விரிவான அடிப்படையில் கற்கையை மேற்கொள்வதற்கும் மீளாய்வு செய்தல்;

(ஈ) இலங்கை மத்திய வங்கி ஒதுக்கு முறைமை, ஏற்றுமதி மற்றும் வெளிநாட்டு வர்த்தக ஊக்குவிப்பு, ஏற்றுமதி கட்டுப்பாடுகள், இறக்குமதிக் கட்டுப்பாடுகள், வணிக, கைத்தொழில் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கான நிதி உதவி, நிதி நடவடிக்கைமுறைகள், நிதி நிறுவனங்களின் செயலாற்றுகை மற்றும் முகாமைத்துவம், நாணயத் தாள்கள், நாணயக் குற்றிகள் மற்றும் நாணயம் ஆகியவற்றின் பகிர்ந்தளித்தல் மற்றும் மீட்பு, கடன் கொடுத்தல் மற்றும் அறவிடல் தொடர்பான விடயங்கள் ஆகியவை உள்ளடங்கலாக நாணயக் கொள்கையுடன் தொடர்பான விடயங்களை தொடர்ச்சியான ஓர் அடிப்படையில் மீளாய்வு செய்வதற்கும்; மற்றும் நிதியியல் துறையின் உறுதிப்பாட்டையும் தொடர்ச்சியையும் உறுதிப்படுத்துவதற்கும் விதப்புரைகளை ஏற்பாடு செய்வதை உள்ளிட்ட நாணயக் கொள்கை தொடர்பான விடயங்களை தொடர்ச்சியான அடிப்படையில் மீளாய்வு செய்தல்;

(உ) இலங்கையில் வங்கிகளுக்கிடையிலான வழங்கல் வீதங்களை (Sri Lanka Inter Bank Offered Rate (SLIBOR)) நிர்ணயிக்கும் செயற்பாட்டின் போது ஒழுங்குமுறைப்படுத்தல், வணிகப் போட்டி தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளல் மற்றும் பரிசீலித்தல்;

(ஊ) காப்புறுதி உள்ளடங்கலாக அரச நிதி நிறுவனங்கள் மற்றும் நிதிச் சேவைகளை ஏற்பாடு செய்தல் தொடர்பாக கூட்டிணைந்த ஆளுகை, செயலாற்றுகை மற்றும் முகாமைத்துவம், வெளிப்படைத்தன்மை மற்றும் அக்கறைகளின் முரண்பாடு ஆகியவற்றை மீளாய்வு செய்தல்;

(எ) காப்புறுதி உள்ளடங்கலாக நிதிக் கொள்கை மற்றும் நிதி நிறுவனங்கள் தொடர்பாக அரசாங்கம் மற்றும் எதிர்கால அரசாங்கங்கள் மற்றும் பாராளுமன்றத்தின் பொறுப்புகளைப் பற்றி கொள்கை மீளாய்வுகளை மேற்கொள்ளல்;

(ஏ) பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் செயலாற்றுகை மற்றும் முகாமைத்துவம் மற்றும் மூலதனச் சந்தை முன்னேற்றங்கள் பற்றி பரிசீலிப்பதற்கும் அறிக்கையிடுதல்;

(ஒ) கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் செயலாற்றுகை மற்றும் முகாமைத்துவம் பற்றி பரிசோதனை செய்வதற்கும் அறிக்கையிடுதல்;

(3) அரசுக்குச் சொந்தமான ஏதேனும் வங்கி அல்லது காப்புறுதி உட்பட நிதிச்சேவைகளை வழங்கும் ஏதேனும் வேறு நிறுவனம் அல்லது ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் கீழ் அரசாங்கத்துக்கு உரித்தாக்கப்பட்டுள்ள வேறு நிறுவனங்கள் பற்றிய கண்டறிதல்களையும் அத்துடன் அதிலிருந்து எழும் ஏதேனும் விடயத்தையும் குழு மூன்று மாதங்களுக்கொரு தடவை பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுதல் வேண்டும். இவ்வறிக்கை பரிகார நடவடிக்கைகள் தேவைப்படும் விடயங்கள் மற்றும் ஏதேனும் விதப்புரைகள் இருப்பின் அவை பற்றிய அவதானிப்புக்களை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

(4) வங்கித்தொழில் மற்றும் நிதிச் சேவைகள் பற்றிய குழுவின் அறிக்கையொன்று சபையில் சபாபீடத்தில் இடப்பட்டதும் அவ் அறிக்கை நிதி எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கும் உரிய நிறுவனங்களுக்குப் பொறுப்பான அமைச்சர்களுக்கும் ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமென்பதுடன் அவர்கள் தம் அவதானிப்புகளையும் அது தொடர்பாக எடுத்த நடவடிக்கைகளையும் எட்டு வாரக் காலப்பகுதியினுள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுதல் வேணடும் என்பதுடன் குறித்த அவதானிப்புகள் தொடர்பில் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைமுறைகள் பற்றிய கூற்றொன்றை சமர்ப்பித்தல் அல்லது அச் சிபாரிசுகள் நிறைவுசெய்யப்படலாகாது என்பது அமைச்சரின் கருத்தானால் அதற்கான காரணத்தை அமைச்சர் எழுத்தில் விளக்குதல் வேண்டும் என்பதுடன் அமைச்சர் மேற்கொள்வதற்கு உத்தேசித்துள்ள மாற்று நடவடிக்கையையும் சுட்டிக்காட்டுதல் வேண்டும். குழுவுக்குத் தேவைப்படின் நிலைப்பாட்டை நேரில் வந்து விளக்குமாறு சம்பந்தப்பட்ட அமைச்சரை அழைப்பதுடன் அவ்வாறான விடயம் தொடர்பாக எழுகின்ற கேள்விகளுக்கு எட்டு வாரங்களினுள் பதிலளிக்குமாறும் கோரலாம்.

(5) (அ) குழு தேவைக்கேற்றவாறு, ஏனைய நிறுவனங்களைப் பரிசீலிப்பதற்கு அதன் உறுப்பினர்களைக் கொண்ட உப குழுக்களை நியமித்தல் வேண்டும். ஆயின், ஏனைய உறுப்பினர்கள் விரும்பினால் இவ்வாறான ஏதாவது குழுக் கூட்டங்களில் கலந்துகொள்ளலாம். குழு அவசியமானது எனக் கருதும் அவ்வாறான விடயங்கள் தொடர்பில் அவ்வாறான உப குழுக்கள் குழுவிற்கு அறிக்கையிடுதல் வேண்டும்.

(ஆ) குழு அல்லது குழுவினால் நியமிக்கப்படும் உப குழு தேவைக்கேற்றவாறு குழுவினால் தீர்மானிக்கப்படும் சம்பந்தப்பட்ட ஏதாவது நிறுவனங்கள் தொடர்பில் பாராளுமன்றத்தில் அல்லது குறித்த அந்த நிறுவனத்தில் அமர்வுகளை நடாத்துதல் வேண்டும்.

(6) குழுவின் உறுப்பினர்களாகவிராத பாராளுமன்றத்தின் வேறு உறுப்பினர்கள் அத்தகைய குழுவின் நடவடிக்கைகளை அவதானிப்பதற்கு தவிசாளரின் அனுமதியுடன் அனுமதிக்கப்படலாம்.

(7) வங்கித்தொழில் மற்றும் நிதிச்சேவைகள் பற்றிய குழு அல்லது அதன் உப குழு எதுவும் அதன் கடமைகளைப் புரிவதற்காக எவரேனுமாளை அதன் முன்னர் அழைத்து வினவுவதற்கும் ஏதேனும் பத்திரத்தை, புத்தகத்தை, பதிவேட்டை அல்லது வேறு ஆவணத்தைக் கோருவதற்கும், பரிசீலிப்பதற்கும் களஞ்சியங்கள், சொத்துக்கள் என்பனவற்றைப் பார்வையிடவும் அதிகாரமுடையதாயிருத்தல் வேண்டும்.

(8) வங்கி மற்றும் நிதிச்சேவைகள் குழுவின் கூட்ட நடப்பெண் ஐந்து உறுப்பினர்களைக் கொண்டிருக்குமாக. குழுவால் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய உரிய காரணமின்றி அக்குழுவின் தொடர்ச்சியான மூன்று கூட்டங்களிற்கு வருகைதராதுள்ள எவரேனும் உறுப்பினர், அத்தகைய குழுவின் உறுப்பாண்மையை இழந்துள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டும்.

**புதிய நிலையியற் கட்டளை 123,—**

## பொருளாதார உறுதிப்படுத்தல் பற்றிய குழு

(1) தெரிவுக் குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் அமைச்சரவை அமைச்சர்கள் அல்லாத பதினாறு உறுப்பினர்களைக் கொண்ட பொருளாதார உறுதிப்படுத்தல் பற்றிய குழுவெனப் பெயர்குறிக்கப்பட்ட குழுவொன்று இருத்தல் வேண்டும்.

(2) பொருளாதார உறுதிப்படுத்தல் பற்றிய குழுவானது பின்வரும் தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:–

(அ) அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் செயலாற்றுகை, முகாமைத்துவம், தொழிற்பாட்டு வினைத்திறன், கொள்கைச் சட்டகம், சட்டச் சட்டகம் மற்றும் இடர் முகாமைத்துவம் ஆகியவற்றைப் பரிசீலித்தல்.

(ஆ) அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் நிதி உறுதிப்பாடு, கடன் முகாமைத்துவம், இலாபம் மற்றும் முதலீட்டு முகாமைத்துவம் ஆகியவற்றைப் பரிசீலித்தல்.

(இ) சொத்துக்களின் உரிமை நீக்கத்துக்கான தேவைப்பாடுகளையும் அரச – தனியார் பங்குடைமைகளுக்கான வாய்ப்புகளையும் இழப்புகளைக் குறைத்து அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் இலாபங்களை அதிகரிப்பதற்கான உபாயமார்க்கங்களையும் பரிசீலித்தல்.

(ஈ) அரசுக்குச் சொந்தமான தொழில்முயற்சிகளால் தொழிலுக்கு அமர்த்தப்பட்டுள்ளவர்கள் தொடர்பான மனித வள முகாமைத்துவம், மிகை அல்லது தேவைக்கு மேற்பட்ட பணியாளர் குறைப்பு, ஊதியங்கள் மற்றும் நியதிச்சட்டக் கொடுப்பனவு நிலுவைகளை செலுத்தாதிருத்தல் மற்றும் ஊதியங்கள் மற்றும் படிகளை மேலதிகமாகச் செலுத்துதல் ஆகியவற்றைப் பரிசீலித்தல்.

(3) 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தினாலும் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்கக் கம்பனிகள் சட்டத்தினாலும் ஆளுகை செய்யப்படும் அரசுக்குச் சொந்தமான ஏதேனும் தொழில்முயற்சிகள் பற்றிய கண்டறிதல்களைக் குழு மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுதல் வேண்டும்.

(4) பொருளாதார உறுதிப்படுத்தல் பற்றிய குழுவின் அறிக்கையொன்று சபையில் சபாபீடத்தில் இடப்பட்டதும் அவ் அறிக்கை நிதி எனும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கும் உரிய நிறுவனங்களுக்குப் பொறுப்பான அமைச்சர்களுக்கும் ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமென்பதுடன் அவர்கள் தம் அவதானிப்புகளையும் அது தொடர்பாக எடுத்த நடவடிக்கைகளையும் எட்டு வாரக் காலப்பகுதியினுள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுதல் வேணடும் என்பதுடன் குறித்த அவதானிப்புகள் தொடர்பில் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைமுறைகள் பற்றிய கூற்றொன்றை சமர்ப்பித்தல் அல்லது அச் சிபாரிசுகள் நிறைவுசெய்யப்படலாகாது என்பது அமைச்சரின் கருத்தானால் அதற்கான காரணத்தை அமைச்சர் எழுத்தில் விளக்குதல் வேண்டும் என்பதுடன் அமைச்சர் மேற்கொள்வதற்கு உத்தேசித்துள்ள மாற்று நடவடிக்கையையும் சுட்டிக்காட்டுதல் வேண்டும். குழுவுக்குத் தேவைப்படின் நிலைப்பாட்டை நேரில் வந்து விளக்குமாறு சம்பந்தப்பட்ட அமைச்சரை அழைப்பதுடன் அவ்வாறான விடயம் தொடர்பாக எழுகின்ற கேள்விகளுக்கு எட்டு வாரங்களினுள் பதிலளிக்குமாறும் கோரலாம்.

(5) (அ) குழு தேவைக்கேற்றவாறு, ஏனைய நிறுவனங்களைப் பரிசீலிப்பதற்கு அதன் உறுப்பினர்களைக் கொண்ட உப குழுக்களை நியமித்தல் வேண்டும். ஆயின், ஏனைய உறுப்பினர்கள் விரும்பினால் இவ்வாறான ஏதாவது குழுக் கூட்டங்களில் கலந்துகொள்ளலாம். குழு அவசியமானது எனக் கருதும் அவ்வாறான விடயங்கள் தொடர்பில் அவ்வாறான உப குழுக்கள் குழுவிற்கு அறிக்கையிடுதல் வேண்டும்.

(ஆ) குழு அல்லது குழுவினால் நியமிக்கப்படும் உப குழு தேவைக்கேற்றவாறு குழுவினால் தீர்மானிக்கப்படும் சம்பந்தப்பட்ட ஏதாவது நிறுவனங்கள் தொடர்பில் பாராளுமன்றத்தில் அல்லது குறித்த அந்த நிறுவனத்தில் அமர்வுகளை நடாத்துதல் வேண்டும்.

(6) குழுவின் உறுப்பினர்களாகவிராத பாராளுமன்றத்தின் வேறு உறுப்பினர்கள் அத்தகைய குழுவின் நடவடிக்கைகளை அவதானிப்பதற்கு தவிசாளரின் அனுமதியுடன் அனுமதிக்கப்படலாம்.

(7) பொருளாதார உறுதிப்படுத்தல் பற்றிய குழு அல்லது அதன் உப குழு எதுவும் அதன் கடமைகளைப் புரிவதற்காக எவரேனுமாளை அதன் முன்னர் அழைத்து வினவுவதற்கும் ஏதேனும் பத்திரத்தை, புத்தகத்தை, பதிவேட்டை அல்லது வேறு ஆவணத்தைக் கோருவதற்கும், பரிசீலிப்பதற்கும் களஞ்சியங்கள், சொத்துக்கள் என்பனவற்றைப் பார்வையிடவும் அதிகாரமுடையதாயிருத்தல் வேண்டும்.

(8) பொருளாதார உறுதிப்படுத்தல் பற்றிய குழுவின் கூட்ட நடப்பெண் ஐந்து உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும். குழுவினால் ஏற்றுக்கொள்ளத்தக்க நியாயமான காரணமின்றி அக்குழுவின் தொடர்ச்சியான மூன்று கூட்டங்களிற்கு வருகைதராதுள்ள எவரேனும் உறுப்பினர், அத்தகைய குழுவின் உறுப்பாண்மையை இழந்துள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டும்.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

## 2022 டிசெம்பர் 09, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

3/2022

கௌரவ கயந்த கருணாதிலக்க,— சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) காணி கொள்ளல் சட்டத்தின் கீழ், அரசாங்கத்தின் நியதிச் சட்ட நிறுவனங்களுக்கென கொள்ளப்படுகின்ற காணிகளுக்காகச் செலுத்தவேண்டிய இழப்பீடுகளையும் பிற நிருவாகச் செலவுகளையும் உரிய நிறுவனம் ஏற்க வேண்டும் என்பதையும்;

(ii) ஆயினும், அந் நிறுவனங்களுக்கு பொதுத் திறைசேரியினால் ஒதுக்கப்படுகின்ற நிதி அக்கருமத்திற்காகப் பயன்படுத்தப்படுகிறது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) பொதுத் திறைசேரியின் நிதி ஏற்பாடுகளைக்கொண்டு நியதிச் சட்ட நிறுவனங்களுக்காக கொள்ளப்படுகின்ற தனியார் காணிகளை, அந்த நிறுவனங்களுக்கு உரிமை மாற்றல் செய்வதற்கான வழிமுறை;

(ii) அதற்கு ஏற்புடைய சட்டம்;

என்பன யாவை என்பதை அவர் தெரிவிப்பாரா?

(இ) (i) பொதுத் திறைசேரியின் நிதி ஏற்பாடுகளைக்கொண்டு நியதிச்சட்ட நிறுவனங்களுக்காக கொள்ளப்படுகின்ற தனியார் காணிகளை, காணி கொள்ளல் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க உரிமை மாற்றல் சான்றிதழ் ஒன்றின் ஊடாக அந்த நிறுவனங்களுக்கு உரிமை மாற்றம் செய்யுமாறு காணி அமைச்சினால் பிரதேச செயலாளர்களுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) அவ்வாறு பணிப்புரை வழங்குவதானது மேற்படி சட்டத்தின் ஏற்பாடுகள், காணிக் கட்டளைகள் மற்றும் சுற்றறிக்கைகளுக்கு முரணானது என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) அவ்வாறாயின், இந்த நிலைமையைச் சீராக்குவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும் அவர் தெரிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

33/2022

கௌரவ புத்திக பத்திறண,— வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புலமைச் சொத்துக்களைப் பாதுகாப்பதற்காக புதிய சட்டங்களை உருவாக்குவதற்கும் தற்போதுள்ள சட்டங்களைத் திருத்துவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி புதிய சட்டங்கள் மற்றும் திருத்தப்பட்ட சட்டங்கள் தனித்தனியாக யாவையென்பதையும்;

(iii) இதன் விளைவாக படைப்பாளர்களுக்கு கிட்டும் நன்மைகள் மற்றும் பாதுகாப்பு தனித்தனியாக யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2018.01.01 முதல் 2021.01.01 வரையிலான காலப்பகுதியில் புலமைச் சொத்துக்களை தவறாகப் பயன்படுத்தியமை தொடர்பாக தவறாளிகளென தீர்ப்பளிக்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு ஆளுக்கும் எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

300/2022

கௌரவ சட்டத்தரணி வசந்த யாப்பாபண்டார,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மகாவலி கங்கையை அண்டியதாக மணல் அகழப்படுவதால் அந்த கங்கையின் இயல்பான போக்கு தடைப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) கங்கையின் இருமருங்கிலுமுள்ள கரைகளில் குவிக்கப்பட்டுள்ள மணல் குவியல்கள் காரணமாக, சாதாரண மழையின் போதும் வெள்ளம் ஏற்படக்கூடிய வாய்ப்பு காணப்படுகிறது என்பதையும்;

(iii) அத்தகைய மணல் குவியல்கள், பேராதனை - கன்னோறுவ இராணுவ முகாம் மற்றும் கெட்டம்பே ராஜோபவனாராம விகாரைக்கு அருகாமையிலுள்ள பிரதேசம் முழுவதிலும் பரந்து காணப்படுகின்றன என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) மேற்படி (அ) (iii)இல் தெரிவிக்கப்பட்டுள்ள மணல் சார்ந்த பிரதேசம் பயனுள்ள பொருளாதார கருமத்திற்காக பயன்படுத்தப்படுகிறதா என்பதையும்;

(ii) இன்றேல், அவ்வாறு பயன்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

347/2022

கௌரவ ஹேஷா விதானகே,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையிலுள்ள அரச மற்றும் தனியார் வைத்தியசாலைகளின் வருடாந்த சேலைன் தேவை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) இலங்கையில் தற்போது சேலைன் உற்பத்தி செய்வதற்கான நிறுவனங்கள் தாபிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) சேலைன் இறக்குமதி செய்வதற்காக வருடமொன்றில் செலவிடப்படும் பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கையில் சேலைன் உற்பத்தி செய்யப்படுமாயின், இலங்கையின் வருடாந்த சேலைன் தேவையில் மேற்படி அளவு எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கான ஒரு வேலைத்திட்டம் தற்போது உள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அவ் வேலைத்திட்டம் யாதென்பதையும்;

(iv) இலங்கையில் சேலைன் உற்பத்தி செய்யப்படவில்லையெனில், சேலைன் உற்பத்தியைத் தொடங்குவதற்கான வேலைத்திட்டமொன்று உள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், அவ் வேலைத்திட்டம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

674/2022

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) பொலன்னறுவை மாவட்டத்தில், ஹிங்குரக்கொட உட்பட்ட பல பிரதேசங்களில் வசிக்கும் பெரும்பாலான குடும்பங்கள் அலங்கார மலர்ச் செய்கையில் ஈடுபடுகின்றனர் என்பதையும்;

(ii) அத்தகைய மலர்ச் செய்கையாளர்களுக்குத் தேவையான மண்ணைப் பெற்றுக்கொள்வதில் காணப்படுகின்ற சிரமங்களையும், மலர்களுக்கென நிலையானதொரு விலை இல்லாமை காரணமாக இவர்கள் பல்வேறு பிரச்சினைகளையும் எதிர்நோக்கியுள்ளனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) அவ்வாறாயின், மேற்படி பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக எடுக்கப்படும் நடவடிக்கை யாது என்பதையும் அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

970/2022

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— பெருந்தோட்ட அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தில் வெற்றிலைச் செய்கை பெருமளவில் மேற்கொள்ளப்படுகின்றது என்பதையும்;

(ii) வெற்றிலைக்கான கேள்வி உயர்ந்த மட்டத்தில் காணப்படுகின்ற போதிலும் அதன் விற்பனை விலை குறைந்த மட்டத்தில் உள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) வெற்றிலையின் விற்பனை விலையை அதிகரிப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு – மேற்கு, கிரான்குளம் ஆகிய கிராமங்களில் வாழ்கின்ற மக்களுள் சுமார் 30% தமது வாழ்வாதாரமாக மரமுந்திரிகை பயிர்ச்செய்கையில் ஈடுபடுகின்றனர் என்பதையும்;

(ii) கிராமிய அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் கருத்திட்டத்தின் கீழ் அம்மக்களுக்கு மாகாண சபையினூடாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள போதிலும் இதுவரை மேற்படி நிதி ஒதுக்கீடு பெற்றுக்கொடுக்கப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஈ) (i) மேற்படி நிதி ஒதுக்கீடு பெற்றுக்கொடுக்கப்படாமைக்கான காரணம் யாதென்பதையும்;

(ii) மேற்படி நிதி ஒதுக்கீட்டினை பெற்றுக்கொடுப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

1107/2022

கௌரவ சமிந்த விஜேசிறி,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மத்திய வங்கியின் பிணைமுறி மோசடி தொடர்பில் ஆராய்வதற்காக சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) மேற்படி ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டுள்ள விதப்புரைகள் யாவையென்பதையும்;

(iii) பிணைமுறி மோசடியுடன் நேரடியாக தொடர்புடைய நபர்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iv) மேற்படி பிணைமுறி மோசடி தொடர்பில் இற்றைவரை மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1514/2022

கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) (i) 2018 உள்ளூராட்சித் தேர்தல் நடாத்தப்பட முன்னர் உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்களாகச் செயற்பட்ட வெளிக்கள அலுவலர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு அலுவலரும் சேவையாற்றிய நிறுவனம் தனித்தனியே யாதென்பதையும்;

(iii) அவர்களில் தவிசாளர்/துணைத் தவிசாளர்/மாநகர முதல்வர்/ மாநகர துணை முதல்வர்களாகச் செயற்பட்டவர்களின் எண்ணிக்கை மற்றும் தொடர்புடைய உள்ளூராட்சி மன்றங்கள் யாவையென்பதையும்;

(iv) மேலே (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள அலுவலர்களில் உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்களாகச் செயற்பட்ட சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்கள் மற்றும் கமத்தொழில் ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(v) அவர்களில் தவிசாளர்/துணைத் தவிசாளர்/மாநகர முதல்வர்/ மாநகர துணை முதல்வர்களாகச் செயற்பட்டவர்களின் எண்ணிக்கை மற்றும் தொடர்புடைய உள்ளூராட்சி மன்றங்கள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) வெளிக்கள அலுவலர்கள் தேர்தலில் போட்டியிடுவதைத் தடை செய்து அப்போதைய அரசாங்கம் கொண்டுவந்த சட்டங்களின் காரணமாக (அ)(iv) இல் குறிப்பிடப்பட்டுள்ள அலுவலர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டது என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அதனை சீர் செய்வதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாது என்பதையும்;

(iii) தொடர்புடைய சட்டத்தைத் திருத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iv) அத்திகதி யாது என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1531/2022

கௌரவ இஷாக் ரஹுமான்,— நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) கலா வாவியின் மூலம் பயன்பெறுகின்ற மகாவலி – எச் வலயத்தில் அமைந்துள்ள குளங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற் குறிப்பிட்ட குளங்கள் முறையாக பராமரிக்கப்படாத காரணத்தினால் அவை நீரியல் தாவரங்களால் நிறைந்துள்ளதென்பதையும்;

(ii) இதன் காரணமாக நெற் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றார்கள் என்பதையும்;

(iii) மேற்படி குளங்கள் சார்ந்ததாக மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள மீனவர்கள் தொழில்களை இழக்கின்ற அபாயம் ஏற்பட்டுள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(இ) மேற் குறிப்பிட்ட விவசாயிகள் மற்றும் மீனவர்கள் எதிர்கொண்டுள்ள சிரமங்களை கவனத்தில் கொண்டு மேற்படி குளங்களைப் புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும் அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1675/2022

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— நீர்ப் பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தளை மாவட்டத்திலுள்ள கிராமங்களுக்கு மத்தியில் இன்றளவில் பாசன நீர்ப் பிரச்சினையை எதிர்நோக்கியுள்ள கிராமங்களின் எண்ணிக்கை எத்தனை;

(ii) அவற்றின் பெயர்கள் யாவை;

(iii) மாத்தளை மாவட்டத்தில் காணப்படுகின்ற பாசன நீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல் ஏன்?

1898/2022

கௌரவ அஜித் மான்னப்பெரும,— தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை வெளிநாட்டில் பணியாற்றிய நிலையில் மரணமடைந்த, நோய்வாய்ப்பட்ட மற்றும் விபத்துகளுக்கு ஆளாகிய இலங்கைப் பணியாளர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு வருட அடிப்படையில் வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(ii) அவர்களுள் காப்புறுதி நட்டஈட்டுக்கான உரித்தினைப் பெற்ற மற்றும் உரித்தினைப் பெறாத பணியாளர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(iii) காப்புறுதி நட்டஈட்டுக்கான உரித்தினைப் பெற்ற பணியாளர்களுக்குச் செலுத்தப்பட்ட மொத்த பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(iv) காப்புறுதி நட்டஈட்டுக்கான உரித்தினைப் பெறாத பணியாளர்களுக்காக ஏதேனும் அனுகூலத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், அது தொடர்பிலான விபரங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2003/2022

கௌரவ ஜே.சீ. அலவத்துவல,— சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சரைக் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குருநாகல் மாவட்டத்தில் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவினால் சுவீகரிக்கப்பட்டு, மக்களுக்கு வசிப்பதற்காக இதுவரை பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள ஒவ்வோர் காணியினதும் பெயர், காணியின் அளவு, காணித்துண்டுகளின் எண்ணிக்கை, காணித்துண்டுகளை பகிர்ந்தளித்த திகதி, காணி அமைந்துள்ள கிராமம், கிராம சேவகர் பிரிவு மற்றும் பிரதேச செயலாளர் பிரிவு என்பன வெவ்வேறாக யாவை என்பதையும்;

(ii) மேற்குறிப்பிட்ட காணித்துண்டுகளுக்கு உறுதிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) இன்றேல், அக்காணிகளுக்கு உறுதிகளை வழங்க உத்தேசித்துள்ள திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) (i) மேலே அ(i) இல் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டுகளுக்காக பணம் அறவிடப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனில், எவ்வடிப்படையில் பணம் அறவிடப்படும் என்பதையும்;

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2044/2022

கௌரவ வேலு குமார்,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்கு உரித்தான தோட்டக் காணிகளில் பாற்பண்ணைகளை நிறுவுவதற்கு 2021.09.06 ஆம் திகதி அமைச்சரவைத் தீர்மானமொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) இதற்கென "கலபொட" மற்றும் "மவுண்ட் ஜீன்" ஆகிய ஒவ்வொரு தோட்டத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளப்படும் காணிகளின் அளவு ஏக்கர்களில் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iii) இக் காணிகளைப் பெற்றுக்கொள்ளும் ஒவ்வொரு கம்பெனியினதும் பெயர், அக்கம்பெனிகளின் பணிப்பாளர்களின் பெயர்கள், அவர்களின் தேசியம் (உள்நாட்டவரா அல்லது வெளிநாட்டவரா) என்பன வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iv) மேற்படி ஒவ்வொரு கம்பெனியினால் செலுத்தப்படும் முற்பணத் தொகை மற்றும் ஒரு ஏக்கருக்கான வருடாந்த குத்தகைத் தொகை என்பன வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி தோட்டங்கள் அமைந்துள்ள மாவட்டங்களில் உள்ள அரச பாற்பண்ணைகளிடம் போதியளவு காணிகள் இருப்பதை அறிவாரா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், மேற்படி காணிகளை பாற்பண்ணைகளுக்காக வழங்கப்பட்டதன் அடிப்படை யாதென்பதையும்;

(iii) அப் பாற்பண்ணைகளை நிறுவுவதற்காக சாத்தியவள ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2061/2022

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ,— மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) நுரைச்சோலை அனல் மின் உற்பத்தி நிலையத்தின் மூன்றாம் கட்டத்தை ஆரம்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்காக செலவிடப்படும் பணத் தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி நிதி எந்த மூலத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்படும் என்பதையும்;

(iv) அதன் கீழ் எத்தனை மெகாவொட் மின்சாரம் உற்பத்திசெய்ய எதிர்பார்க்கப் படுகிறது என்பதையும்;

(v) இக் கருத்திட்டத்திற்கு கேள்விப் பத்திரம் கோரப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2173/2022

கௌரவ ரோஹண பண்டார,— வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வ/ப கல்விச் சேவை ஊழியர்களின் கூட்டுறவுச் சிக்கன கடனுதவிச் சங்கத்தில் இன்றளவில் காணப்படுகின்ற அங்கத்தவர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி சங்கத்தில் இன்றளவில் காணப்படுகின்ற சொத்துக்களின் அளவு எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி சங்கத்தின் அங்கத்தவர்களின் பணம் அதன் நிர்வாகத்தினரால் துஷ்பிரயோகம் செய்யப்படுவதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தை உள்ளிட்ட சங்கங்களால் குற்றஞ்சாட்டப்படுவதை அறிவாரா என்பதையும்;

(iv) மேற்படி துஷ்பிரயோகச் செயற்பாடுகளைத் தடுப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2521/2022

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் தொடக்கம் 2019 ஆம் ஆண்டு நவம்பர் வரையான காலப்பகுதியில் பாதுகாப்புச் சபை கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ள நாட்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி கூட்டங்களில் பங்கேற்றோர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) பாதுகாப்புச் சபை கூட்டங்களில் சட்ட ரீதியாக பங்கேற்பதற்கு உரித்துள்ள அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகள் யாவர் என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) காணப்பட்ட சம்பிரதாயத்துக்கு முரணாக மேற்படி காலப்பகுதியில் பல்வேறு நபர்கள் பாதுகாப்புச் சபைக் கூட்டங்களில் பங்கேற்றுள்ளனர் என்பதை உயிர்த்த ஞாயிற்றுத் தாக்குதல் தொடர்பான சனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் வெளிப்படுத்தப்பட்டதை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அது தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2536/2022

கௌரவ சட்டத்தரணி மதுர விதானகே,— மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் சிறுநீரக நிதியத்தில் ஏதேனும் முறைகேடு, முறையற்ற நியமனம், ஊழல் செயற்பாடு அல்லது சட்டவிரோத செயற்பாடு இடம்பெற்றுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவை வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iii) மேற்குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு செயற்பாட்டின் விளைவாகவும் அரசாங்கம் இழந்துள்ள நிதி, சொத்து மற்றும் மனித வளங்களின் பெறுமதி வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி (அ)(i) இல் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளுக்குப் பொறுப்புக் கூறவேண்டிய அலுவலர்களை அடையாளம் காண்பதற்கென புலனாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் அடையாளம் காணப்பட்டிருப்பின், அவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) அவர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாவிடின், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iv) அவர்களுக்கு எதிராக எதிர்காலத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(v) எதிர்காலத்தில் இடம்பெறக்கூடிய இத்தகைய செயற்பாடுகளைத் தடுப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2554/2022

கௌரவ குமாரசிறி ரத்நாயக்க,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரை, தேசிய பாதுகாப்புக் கல்லூரிகளில் ஏதேனும் முறைகேடு, முறையற்ற நியமனம், மோசடி அல்லது சட்ட விரோதச் செயல் இடம்பெற்றுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அவை வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு விடயம் காரணமாக அரசாங்கம் இழந்துள்ள நிதி, சொத்து மற்றும் மனித வளங்களின் பெறுமதி வெவ்வேறாக யாது என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி (அ)(i) இல் தெரிவிக்கப்பட்டுள்ள செயல்களுக்குப் பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்களை இனங்காண விசாரணைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் இனங்காணப்பட்டிருப்பின், இவர்களுக்கு எதிராக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) இவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவில்லையெனின், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iv) எதிர்காலத்தில் இவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(v) எதிர்காலத்தில் இடம்பெறக்கூடிய இத்தகைய செயல்களைத் தடுப்பதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2568/2022

கௌரவ சஞ்ஜீவ எதிரிமான்ன,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கர்ப்பிணித் தாய்மார்களுக்கும் குழந்தைகளுக்கும் தேவையான திரிபோஷா தற்போது வழங்கப்படுகின்றதா என்பதையும்;

(ii) கப்புவத்த, ஜா - எலயில் அமைந்துள்ள திரிபோஷா தொழிற்சாலையின் உற்பத்தி நடவடிக்கைகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றனவா என்பதையும்;

(iii) திரிபோஷா உற்பத்திக்குத் தேவையான மூலப்பொருட்கள் உள்நாட்டில் பெற்றுக்கொள்ளப்படுகின்றனவா என்பதையும்;

(iv) இன்றேல், இறக்குமதி செய்யப்படுகின்றனவா என்பதையும்;

(v) இறக்குமதி செய்யப்படுமாயின், 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரை இறக்குமதி செய்யப்பட்டுள்ள மூலப்பொருட்களின் அளவு மற்றும் இதற்கென செலவிடப்பட்டுள்ள தொகை தனித்தனியே எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2591/2022

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கைப் போக்குவரத்துச் சபையின் கிழக்குப் பிராந்தியத்தின், பிரதான பிராந்திய அலுவலகம் கல்முனைப் பிரதேசத்தில் உள்ள கட்டடமொன்றில் வாடகை அடிப்படையில் பேணிவரப்படுகின்றது என்பதையும்;

(ii) மேற்படி அலுவலகத்தை அமைப்பதற்கு மட்டக்களப்புப் பிரதேசத்தில் பொருத்தமான காணி ஒதுக்கப்பட்டுள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி (அ) (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள கட்டடம் எவ்வாண்டில் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டது என்பதையும்;

(ii) அதற்காக பின்பற்றப்பட்ட நடைமுறை யாதென்பதையும்;

(iii) கட்டடத்தின் மாதாந்த வாடகைத் தொகை மற்றும் அது வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட திகதியிலிருந்து இற்றைவரை செலுத்தப்பட்டுள்ள மொத்த வாடகைத் தொகை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி (அ) (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள காணி, மேற்படி விடயத்திற்கு எவ்வாண்டில் ஒதுக்கப்பட்டதென்பதையும்;

(ii) மேற்படி காணியில் உரிய கட்டடத்தை நிர்மாணிப்பதில் தாமதம் ஏற்படக் காரணமான விடயங்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி கட்டடத்தை நிர்மாணித்தல் தொடர்பான எதிர்காலத் திட்டங்கள் யாவை என்பதையும்;

(iv) இவ்வலுவலகத்தை நிறுவும் போது, மட்டக்களப்பு மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்களின் கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகள் பெற்றுக்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2605/2022

கௌரவ அஸோக் அபேசிங்ஹ,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காலனித்துவ ஆட்சியிலிருந்து சுதந்திரம் அடைந்ததன் பின்னர் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி மறைப் பெறுமதியைப் பதிவுசெய்துள்ள வருடங்கள் யாவை;

(ii) மேற்படி ஒவ்வொரு வருடத்திற்குமான பொருளாதார வளர்ச்சி வெவ்வேறாக யாது;

(iii) அந்த ஒவ்வொரு வருடத்திலும் நிதி அமைச்சர் பதவியிலும் சனாதிபதி பதவியிலும் கடமையாற்றியுள்ள நபர்களின் பெயர்கள் வெவ்வேறாக யாவை;

(iv) மேற்படி வருடங்களில் இலங்கையின் பொருளாதாரத்தை வழமை நிலைக்குக் கொண்டுவருவதற்கு அப்போதைய அரசாங்கங்களினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2625/2022

கௌரவ டீ. வீரசிங்க,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் தற்போது காணப்படும் பிரிவெனாக்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி பிரிவெனாக்களில் கல்வி பயிலும் சாதாரண மாணவர்கள் மற்றும் பிக்கு மாணவர்களின் எண்ணிக்கை தனித்தனியே எத்தனையென்பதையும்;

(iii) இப்பிரிவெனாக்களில் கடமையாற்றும் கல்விசார் பணியாட்டொகுதியையும் கல்விசாரா பணியாட்டொகுதியையும் சேர்ந்த ஊழியர்களின் எண்ணிக்கை தனித்தனியே எத்தனையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்கூறப்பட்ட பிரிவெனாக்களில் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக 2022 ஆண்டிற்கென ஒதுக்கப்பட்ட நிதித் தொகை எவ்வளவென்பதையும்;

(ii) புதிதாக பிரிவெனாக்களை ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2633/2022

கௌரவ சம்பத் அதுகோரல,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சிறு போகம் மற்றும் பெரும் போகத்திற்குத் தேவையான பசளையை எதிர்வரும் காலப்பகுதியில் இடையறாது வழங்குவதற்கான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) விதை நெல்லை தட்டுப்பாடின்றி வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iii) இன்றளவில் விதை நெல் பல்வேறு விலைகளில் விற்கப்படுகின்றது என்பதை அறிவாரா என்பதையும்;

(iv) விதை நெல்லின் விலையைக் கட்டுப்படுத்துவதற்கான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) களை நாசினிகளும் கிருமி நாசினிகளும் பல்வேறு விலைகளில் விற்பனை செய்யப்படுகின்றன என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) களை நாசினிகளினதும் கிருமி நாசினிகளினதும் விலைகளைக் கட்டுப்படுத்துவதற்கான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்படுமா என்பதையும்;

(iii) இவற்றை நிவாரண விலையில் வழங்குவதற்காக இன்றளவில் அரசாங்கம் இடையீடு செய்துள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2641/2022

கௌரவ (திருமதி) ராஜிகா விக்கிரமசிங்ஹ,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கைத்தொழிற்சாலைகள் மற்றும் வேறு நிர்மாணத் தளங்களிலிருந்து அதிகளவில் கழிவுகள் ஆறுகளில் இடப்படுகின்றன என்பதையும்;

(ii) சில நிர்மாணங்களுக்கு முறையான ஆய்வுகளின்றி சுற்றாடல் உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) ஆறுகளில் கழிவுகளை இடுகின்ற கைத்தொழிற்சாலைகள்/ நிறுவனங்களை விழிப்புணர்வூட்டி அவ்வாறு கழிவுகள் இடப்படுவதனைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(ii) ஆறுகளில் கழிவுகளை இடுகின்றதாக இன்றளவில் அடையாளங்காணப்பட்டுள்ள கைத்தொழிற்சாலைகள்/நிறுவனங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iii) மேற்படி கைத்தொழிற்சாலைகள்/ நிறுவனங்களுக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2646/2022

கௌரவ காமினி வலேபோட,— வனசீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சில தசாப்தங்களுக்கு முன்னர் இலங்கையில் மனித குடியிருப்புகளாகவும் பயிர்செய்கை நிலங்களாகவும் இருந்த நிலங்கள் பின்னர் ஒதுக்கப்பட்ட வனங்களாக பிரகடனப்படுத்தப்பட்டு வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளன என்பதையும்;

(ii) இதன் காரணமாக இப்பிரதேசங்களில் வாழ்ந்த மக்கள் இன்னலுக்கு உள்ளாகியுள்ளனர் என்பதையும்;

(iii) இம்மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு வழிமுறையொன்று உருவாக்கப்பட வேண்டும் என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) மேற்படி (அ) (i) இல் குறிப்பிடப்பட்ட வர்த்தமானி அறிவிப்பு காரணமாக இன்றளவில் பதிவாகியுள்ள பிரச்சினைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இன்றளவில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(iii) எதிர்காலத்தில் இவ்வாறான பிரச்சினைகள் எற்படாமல் இருப்பதற்கு மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2652/2022

கௌரவ யூ.கே. சுமித் உடுகும்புர,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் அரசாங்க வைத்தியசாலைகளில் தற்போது சேவையாற்றுகின்ற தாதி அலுவலர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) அரசாங்க தாதிச் சேவையில் தற்போது காணப்படுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) மேற்படி வெற்றிடங்களை நிரப்புவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2662/2022

கௌரவ (திருமதி) கோகிலா குணவர்தன,— மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையிலுள்ள அங்கவீனமுற்ற ஆட்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அவர்களுக்கு வழங்கப்படும் மாதாந்தக் கொடுப்பனவிற்காக செலவிடப்படுகின்ற பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) அவர்களுக்கும் குடும்ப அலகுகளுக்குமென வழங்கப்படுகின்ற கொடுப்பனவுகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iv) கொடுப்பனவைப் பெற்றுக்கொள்வதற்காக காத்திருப்புப் பட்டியல்களிலுள்ள அங்கவீனமுற்ற ஆட்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2690/2022

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கைக்கு வாகனங்கள் இறக்குமதி செய்யப்படுவது இன்றளவில் தடைசெய்யப்பட்டுள்ள போதிலும் 2022 பெப்ருவரி 22 ஆம் திகதியளவில் லம்போர்கினி ரக வாகனம் 01 உம், ரோல்ஸ் ரொய்ஸ் ரக வாகனம் 01 உம், ஹேமர் ரக வாகனங்கள் 02 உம் சுங்கம் வரை கொண்டுவரப்பட்டுள்ளனவா;

(ii) மேற்படி வாகனங்களின் சந்தைப் பெறுமதி 57 கோடி ரூபாய் அல்லது அதனை அண்மித்த ஒரு தொகையாகும் என்பதை அறிவாரா;

(iii) மேற்படி வாகனங்கள் 750-800 இலட்சம் ரூபாவிற்கு இடைப்பட்ட பெறுமதியில் இலங்கை சுங்கத்தினால் விடுவிக்கப்பட்டுள்ளனவா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி விடுவிப்பானது சட்டத்திற்கு முரணானது என்பதையும்;

(ii) அதன் மூலம் அரசாங்கத்திற்கு பாரிய நிதி ரீதியான நட்டம் ஏற்பட்டுள்ளது என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) இன்றேல், ஏன்?

2724/2022

கௌரவ மொஹமட் முஸம்மில்,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) வரையறுக்கப்பட்ட சென்ரல் இன்வெஸ்ட்மன்ட் அன்ட் பைனான்ஸ் (Central Investment and Finance PLC - CIFL) எனும் பெயரிலான நிதி நிறுவனமொன்றுக்கு வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இலங்கை மத்திய வங்கி அனுமதி வழங்கியிருந்ததா;

(ii) மேற்படி நிறுவனம் அதன் வைப்பாளர்களின் பணத்தை அவர்களுக்கு மீள்செலுத்தவில்லை என்பதை அறிவாரா;

(iii) மேற்படி நிறுவனம் கடனிறுக்க வகையின்மைக்கு உள்ளாகியமை தொடர்பில் இலங்கை மத்திய வங்கி விசாரணை மேற்கொண்டுள்ளதா;

(iv) மேற்படி விசாரணை அறிக்கையின் விதப்புரைகள் மீது மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

(v) மேற்படி வைப்பாளர்களின் பணத்தை மீள் செலுத்துவதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2887/2022

கௌரவ மாயாதுன்ன சிந்தக அமல்,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கற்பிட்டி குடாநாட்டில் மாதுளை பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படுவதனை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அங்கு மாதுளை பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள நிலப் பரப்பு யாதென்பதையும்;

(iii) கற்பிட்டி குடாநாட்டில் மாதுளை பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iv) மேற்படி விவசாயிகளுக்கு தொழில்நுட்ப அறிவுரைகள் முறையாக கிடைக்கப்படாமை மற்றும் உற்பத்திகளை சந்தைப்படுத்துவது தொடர்பான தடைகள் உள்ளதென்பதை அறிவாரா என்பதையும்;

(v) அவற்றைத் தீர்ப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2981/2022

கௌரவ குணதிலக ராஜபக்ஷ,— வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வரையறுக்கப்பட்ட பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் கொண்டுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு எரிபொருள் நிரப்பு நிலையமும் அமைந்துள்ள பிரதேசங்கள் யாவை என்பதையும்;

(iii) வரையறுக்கப்பட்ட பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு புதிதாக எரிபொருள் நிரப்பு நிலையங்களை அமைப்பதற்கான அனுமதியை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3087/2022

கௌரவ திஸகுட்டி ஆரச்சி,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்திலிருந்து கடன் பெற்றுள்ளவர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி நிறுவனத்திலிருந்து கடன் பெற்றுக்கொள்வதற்காக பூர்த்தி செய்ய வேண்டிய தகைமைகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி நிறுவனம் கடனுக்காக அறவிடும் வருடாந்த வட்டி விகிதம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்திலிருந்து கடன் பெற்று இன்றளவில் கடன் செலுத்துவதற்குத் தவறியுள்ளவர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) கடுமையான பொருளாதார சிரமங்களை எதிர்நோக்கியுள்ளவர்களுக்கு கடன் சலுகை வழங்குவதற்கான சாத்தியம் உள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அது பற்றிய விபரங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3117/2022

கௌரவ (மேஜர்) சுதர்ஷன தெனிபிடிய,— மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையிலுள்ள மின் பாவனையாளர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அதில் இலங்கை மின்சார சபை மற்றும் இலங்கை மின்சார (தனியார்) நிறுவனத்தால் மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ள பாவனையாளர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(iii) மின் இணைப்பைப் பெறுவதற்காக இன்றளவில் விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iv) மேற்படி விண்ணப்பதாரர்களுக்கு மின் இணைப்பைப் பெற்றுக்கொடுப்பதற்கான இயலுமை இலங்கை மின்சார சபையிடம் காணப்படுகின்றதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3156/2022

கௌரவ சமன்பிரிய ஹேரத்,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கைக்கு வருடாந்தம் இறக்குமதி செய்யப்படுகின்ற பிளாஸ்டிக் தும்புத்தடிகள், பிளாஸ்டிக் விளக்குமாறுகள் மற்றும் துப்புரவுச் செயற்பாடுகளுக்காகப் பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் தூரிகைகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனையென்பதையும்;

(ii) அவற்றை இறக்குமதி செய்வதற்கு வருடாந்தம் செலவிடப்படும் தொகை எவ்வளவென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தும்பு சார்ந்த பொருட்களின் பாவனையை ஊக்குவிப்பதற்கு இன்றளவில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) தும்பு சார்ந்த பொருட்களுக்கான பதிலீட்டுப் பொருட்களின் இறக்குமதியை அதைரியப்படுத்துவதற்கு கொள்கை ரீதியான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3165/2022

கௌரவ டப்ளியூ.எச்.எம். தர்மசேன,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரச அலுவலர்களின் பதவியுயர்வுகள் மற்றும் சம்பள ஏற்றங்களைப் பெற்றுக்கொள்வதற்காக அவர்கள் வினைத்திறமைகாண் தடை தாண்டல் பரீட்சைகளில் சித்தியடைய வேண்டும் என்பதையும்;

(ii) 2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் வினைத்திறமைகாண் தடை தாண்டல் பரீட்சைகள் நடத்தப்படாமையினால் அவர்களது பதவியுயர்வுகள் மற்றும் சம்பள ஏற்றங்கள் கிடைக்கவில்லை என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) அவ்வாறாயின், மேற்படி வினைத்திறமைகாண் தடை தாண்டல் பரீட்சைகளை நடாத்துவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3171/2022

கௌரவ மயந்த திசாநாயக்க,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு முதல் இதுவரை இனங்காணப்பட்டுள்ள கண்டி, மாத்தளை மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களில் அமைந்துள்ள அதிக அபாயத்தைக் கொண்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி வீடுகளின் குடியிருப்பாளர்களை வேறு இடங்களில் குடியமர்த்துவதற்கான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) அவர்களுக்கு வழங்கப்படும் அனுகூலங்கள் போதுமானதல்ல என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3208/2022

கௌரவ மிலான் ஜயதிலக்க,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புதிய களனிப் பாலம் தொடக்கம் அத்துருகிரிய வரை தூண்கள்மீது நிர்மாணிக்கப்படும் அதிவேக நெடுஞ்சாலையின் நிர்மாணப்பணிகள் இன்றளவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) இன்றேல், அதற்கான நிர்மாணப்பணிகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாதென்பதையும்;

(iii) மேற்படி வீதியின் நிர்மாணப்பணிகளை நிறைவுசெய்வதற்கு எடுக்கப்படும் காலம் எவ்வளவு என்பதையும்;

(iv) மேற்படி வீதியின் நிர்மாணப்பணிகள் நிறைவு செய்யப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி வீதியை நிர்மாணிப்பதற்கான அளவீட்டுப் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) வீதியின் நிர்மாணப்பணிகள் காரணமாக காணிகளை இழக்கும் ஆட்களுக்கு நட்டஈடு வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3218/2022

கௌரவ சுதத் மஞ்சுல,— நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் கட்டுமானப் பணிகளை மேற்கொள்வதற்காகப் பதிவுசெய்யப்பட்டுள்ள நிறுவனங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி நிறுவனங்கள் வகைப்படுத்தப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி வகைப்படுத்தல்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தர நிர்ணயங்களைப் பின்பற்றாது நிர்மாணப் பணிகளை மேற்கொள்ளும் நிறுவனங்கள் தொடர்பில் பின்பற்றப்படும் நடவடிக்கைமுறை யாதென்பதையும்;

(ii) இன்றளவில், கறுப்புப் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ள கட்டுமான நிறுவனங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3234/2022

கௌரவ இம்ரான் மஹ்ரூப்,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பட்டதாரிகளுக்கான அரசாங்க வேலைவாய்ப்புத் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தின் கீழ் 2019 ஆம் ஆண்டு வேலைவாய்ப்பு வழங்கப்பட்ட சகல பட்டதாரி பயிலுநர்களுக்கும் இன்றளவில் நிரந்தர நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அவர்கள் நிரந்தரமாக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iii) அவர்களின் ஒரு வருட பயிற்சிக் காலம் முடிவடைந்த திகதி யாதென்பதையும்;

(iv) அவர்களது பயிற்சிக் காலத்திற்கான நிலுவைச் சம்பளம் வழங்கப்படுதல் மற்றும் சேவைக் காலம் கணக்கிடப்படுதல் என்பன எவ்வாறு மேற்கொள்ளப்படும் என்பதையும்;

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3262/2022

கௌரவ மர்ஜான் பளீல்,— சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பேருவளை தொடக்கம் ஹிக்கடுவை வரையிலான கரையோரப் பிரதேசத்தைச் சார்ந்த சுற்றுலாக் கைத்தொழில் இன்றளவில் வீழ்ச்சியடைந்திருப்பதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி கரையோரப் பிரதேசத்தைச் சார்ந்த சுற்றுலாக் கைத்தொழிலை மேம்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) சுற்றுலா ஹோட்டல் உரிமையாளர்கள் பெற்றுள்ள கடன்கள் தொடர்பில் நிவாரணம் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(ii) சுற்றுலாக் கைத்தொழிலைக் கட்டியெழுப்புவதற்கு முன்னெடுக்கப்பட்டுள்ள கருத்திட்டங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3267/2022

கௌரவ திலிப் வெதஆரச்சி,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாந்தோட்டை மாவட்டத்தில், தங்கல்லை பிரதேச செயலகப் பிரிவின் மெதகம கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள "யாயவத்த" எனும் காணியின் விஸ்தீரணம் ஏக்கர்களில் எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி காணி தொடர்பில் 1979.04.09 ஆம் திகதி தாக்கல் செய்யப்பட்டு, விசாரிக்கப்பட்ட P 1935 என்னும் வழக்கின் தீர்ப்பு யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2004 ஆம் ஆண்டு இடம்பெற்ற சுனாமி பேரழிவின் காரணமாக இடர்பெயர்ந்தவர்களுக்கு வீடுகளை நிர்மாணிப்பதற்கென மேற்குறிப்பிட்ட காணியிலிருந்து கையகப்படுத்தப்பட்ட காணித்துண்டின் விஸ்தீரணம் யாது என்பதையும்;

(ii) மேற்படி பரப்பளவில் மயானத்துக்காக ஒதுக்கப்பட்டுள்ள காணித்துண்டின் விஸ்தீரணம் யாது என்பதையும்;

(iii) மயானத்துக்காக ஒதுக்கியதன் பின்னர் எஞ்சியுள்ள காணித்துண்டின் விஸ்தீரணம் யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3318/2022

கௌரவ (திருமதி) முதிதா பிரிஸான்தி,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் பெருந்தோட்டக் கம்பனிகளுக்குரிய பயிரிடப்படாத பெருமளவிலான காணிகள் உள்ளதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி பயிரிடப்படாத காணிகளின் அளவு, ஒவ்வொரு மாகாணத்தின் அடிப்படையில் ஏக்கர்களில் வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) நீண்ட காலமாக பயிரிடப்படாத பெருந்தோட்டக் கம்பனிகளுக்குரிய காணிகள், இரத்தினபுரி மாவட்டத்தின் கொடகவெல, ஓபநாயக்க மற்றும் வெலிகெபொல ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் உள்ளதை அறிவாரா என்பதையும்;

(iv) மேற்படி பயிரிடப்படாத காணிகளின் அளவு, மேலே குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவின் அடிப்படையில் ஏக்கர்களில் வெவ்வேறாக யாதென்பதையும்;

(v) மேற்படி காணிகளை பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்காக மக்களுக்கு வழங்குவதற்கு யாதேனும் வழிமுறை உள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3335/2022

கௌரவ தயாசிறி ஜயசேக்கர,— தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்காக இலங்கை ஊழியர்களைக் கோருகின்ற வெளிநாடுகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு நாடும் இலங்கைக்கு வழங்குவதாக அறிவித்துள்ள வேலைவாய்ப்புகளின் எண்ணிக்கை தனித்தனியாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்காக மொழிச் சான்றிதழ்கள் தேவைப்படும் நாடுகள் யாவை என்பதையும்;

(ii) அங்கீகரிக்கப்பட்ட தொழில் பயிற்சிச் சான்றிதழ்கள் தேவைப்படும் நாடுகள் யாவை என்பதையும்;

(iii) மொழிச் சான்றிதழ்கள் மற்றும் தொழில் பயிற்சிச் சான்றிதழ்கள் தேவைப்படாத நாடுகள் உள்ளனவா என்பதையும்;

(iv) ஆமெனில், அத்தகைய நாடுகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்காக இலங்கை ஊழியர்களை அனுப்புவதற்கு இன்றளவில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) இலங்கை ஊழியர்கள் வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்குத் தேவையான தகைமைகளை துரிதமாக பூர்த்தி செய்துகொள்வதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

3370/2022

கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வட மாகாணத்தில் இலங்கை போக்குவரத்துச் சபையின் 7 பஸ் டிப்போக்கள் நிறுவப்பட்டுள்ள போதிலும், மேற்படி டிப்போக்களில் காணப்படும் பேரூந்துகளின் பற்றாக்குறை மற்றும் ஆளணியில் நிலவும் வெற்றிடங்கள் காரணமாக மாகாண மக்களுக்கு உரிய சேவையை வழங்க இயலாதுள்ளதென்பதையும்;

(ii) இதன் காரணமாக அரச ஊழியர்கள், ஆசிரியர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு உரிய நேரத்தில் உரிய நிறுவனங்களுக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதென்பதையும்;

(iii) குறிப்பிட்ட சில இடங்களுக்கு போக்குவரத்துச் சேவைகள் இல்லாததால் அதிக செலவில் போக்குவரத்துத் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ள வேண்டியுள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) ஆமெனில், எதிர்வரும் காலத்தில் வடமாகாண மக்களுக்கு தரமான போக்குவரத்துச் சேவையை வழங்குவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3578/2022

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன,— மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வரையறுக்கப்பட்ட ஸ்ரீ லங்கன் எயார் லைன் நிறுவனம் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்த வேண்டியுள்ள நிலுவைத் தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) அத்தொகையை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு அறவிட்டுக் கொடுப்பதற்காக அமைச்சினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3581/2022

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி,— மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இன்றளவில் இலங்கை மின்சார சபைக்கு அறவிடப்பட வேண்டிய நிலுவைப் பட்டியல்களின் பெறுமதி எவ்வளவென்பதையும்;

(ii) பிரபலமான மற்றும் பலமிக்க நபர்கள் மின்சார கட்டணங்கள் செலுத்துவதைத் தட்டிக்கழித்துள்ளனர் என்பதை அறிவாரா என்பதையும்;

(iii) இவர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3662/2022

கௌரவ யதாமிணீ குணவர்தன,— தெழில்நுட்ப அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் தகவல் தொழில்நுட்பக் கல்வியறிவு தொடர்பில் தேசிய வரைவிலக்கணமொன்று உருவாக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவ் வரைவிலக்கணம் யாதென்பதையும்;

(iii) இன்றேல், அத்தகைய வரைவிலக்கணத்தை உருவாக்குவதற்கு தேவைப்படும் காலப்பகுதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கையின் தகவல் தொழில்நுட்பக் கல்வியறிவின் பெறுமதிகளை தேசிய, மாவட்ட மற்றும் பிரதேச செயலகப் பிரிவு மட்டங்களின் அடிப்படையில் வெவ்வேறாக வழங்க முடியுமா என்பதையும்;

(ii) இன்றேல், தகவல் தொழில்நுட்பக் கல்வியறிவின் பெறுமதிகளை மேற்படி ஒவ்வொரு மட்டத்தின் அடிப்படையில் அளவீடு செய்யக்கூடிய முறையியலொன்றைத் தயாரிக்கக் கூடிய விதம் யாதென்பதையும்;

(iii) தகவல் தொழில்நுட்பக் கல்வியறிவினை மேம்படுத்துவதற்காக இன்றளவில் யாதேனும் வேலைத்திட்டம் நடைமுறையிலுள்ளதா என்பதையும்;

(iv) இன்றேல், தகவல் தொழில்நுட்பக் கல்வியறிவினை மேம்படுத்துவதற்காக மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3852/2022

கௌரவ எஸ்.எம். மரிக்கார்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சுமார் மூன்று வருட காலமாக கொலன்னாவ, சேதவத்த, சித்தார்த்த வித்தியாலயத்தின் விளையாட்டு மைதானத்தில் மண் குவிக்கப்பட்டுள்ளதனால் அவ்விளையாட்டு மைதானத்தை குறித்த வித்தியாலயத்தின் மாணவர்கள் விளையாட்டு நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி விளையாட்டு மைதானத்தை விளையாட்டு நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தக் கூடியவாறு அமைப்பதற்கு இதுவரை தாமதமடைவதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி விளையாட்டு மைதானத்தை சீரமைத்து மாணவர்கள் விளையாட்டு நடவடிக்கைகளுக்காக மீண்டும் அதனைப் பயன்படுத்துவதற்கு எப்போது வழங்கப்படும் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3866/2022

கௌரவ இம்தியாஸ் பாகிர் மாகார்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) களுத்துறை மாவட்டத்தில் அமைந்துள்ள தமிழ் மொழிமூல தேசிய பாடசாலைகளின் எண்ணிக்கையும் மாகாண பாடசாலைகளின் எண்ணிக்கையும் வெவ்வேறாக எத்தனையென்பதையும்;

(ii) அவ்வொவ்வொரு பாடசாலையினதும் பெயர், உள்ளடங்கும் கல்வி வலயம், பாடசாலைக்கான வகைப்படுத்தல், இருக்கின்ற தரங்களின் பிரகாரம் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை என்பன வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3911/2022

கௌரவ உபுல் மஹேந்திர ராஜபக்ஷ,— நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சலுகை வாடகை அடிப்படையில் அரச ஊழியர்ளுக்கு வீடுகளைப் பெற்றுக் கொள்வதற்கு வாய்ப்பு இருக்குமாயின், அது அவர்களுக்கு மிகப் பெரிய ஆறுதலாக அமையும் என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) கொழும்பு மற்றும் புறநகர் பகுதிகளில் அமைந்துள்ள அரச நிறுவனங்களில் சேவையாற்றும் அரச ஊழியர்களுக்கு போக்குவரத்து வசதிகளுடைய பிரதேசங்களில் சலுகை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளக் கூடிய வீடமைப்புத் திட்டமொன்றினை அமைப்பதற்குத் திட்டம் வகுக்கப்படுமா என்பதையும்;

(iii) ஆமெனில், கம்பஹா மாவட்டத்தில் அவ்வாறான வீடமைப்புத் திட்டமொன்றினை அமைப்பதற்குத் திட்டம் வகுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?